**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **CC.No.54/2018**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution** அ.சா.**1**

**Defence**
**Court**

**Name** **:**அப்துல்ரகீம்சேட்

Father's/Husband Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873

on the day of **10.10.2022**

**முதல் விசாரணை**:

நான் தற்போது மதுரைமாவட்டம் சத்திரப்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு உதவிஆய்வாளராக பணியில் உள்ளேன். இதற்கு முன்னர் மதுரை மாவட்டம் சேடபட்டி காவல் நிலையத்தில் தலைமைகாவலராக பணியில் இருந்தபோது கடந்த 01.08.2018 அன்று 10.20 மணிக்கு அன்று பொறுப்பில் இருந்த உதவி ஆய்வாளரிடம் ரகசிய தகவலாளி அளித்த தகவலின் பேரில் நானும், தலைமை காவலர்- கிருஷ்ணன் என்பவரும் தக்க

உபகரணங்களுடனும் உதவி ஆய்வாளர் தலைமையில் சேடபட்டியில் எதிரியின் வீட்டின் பின் புறம் காலை 10.30 மணிக்கு கண்காணித்தபோது எங்களை கண்டதும் தப்பி ஓட முயன்றவரை வளைத்து பிடித்து விசாரித்தபோது அவர் தனது பெயர் விலாசம் கூறினார். அவரிடம் எங்களுகு கிடைத்த ரகசிய தகவல் பற்றி உதவி ஆய்வாளர் கூறி அவரை சோதனை செய்ய வேண்டும் என்றும் அருகில் உள்ள நீதித்துறை நடுவரிடமோ அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரியிடமோ சோதனை செய்ய உங்களுக்கு உரிமை உள்ளது என உரிமை விளக்கப்பட்டது. அவர் காவல் துறையினராகிய தாங்களே சோதனை செய்யலாம் வேறு எங்கும் செல்ல விரும்பவிலை என்று கூறினார். அவர் சம்மதத்தை எழுத்து வடிவில் பதிவு செய்து என் முன்னிலையிலும், தலைமைக்காவலர் கிருஷ்ணன் முன்னிலையிலும் சம்மத கடிதம் தயாரித்து கையொப்பம் பெற்றோம். 11.00 மணிக்கு எதிரி தம்மிச்சையாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூல்த்தை எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார். பின்னர் அவர் கொண்டுவந்திருந்த பையை சோதனை இட அதில் கஞ்சா என்ற போதை பொருள் இருந்தது. அதை நாங்கள் கொண்டு சென்றிருந்த தராசில் எடைபோட்டபோது அது சுமார் 3 கிலோ கஞ்சா என்ற போதை பொருள் இருந்தது. அதில் இருந்து தலா 50 கிராம் வீதம் இரண்டு பொட்டலங்களாக பிரித்து பிரவுண் கலர் பேப்பரில் கட்டி போலீஸ் பட்டன் சீல் வைத்து அதற்கு எஸ் -1 எஸ்-2 குறியீடு செய்து மீதம் உள்ள 2.900 கிராம் எடையுள்ள கஞ்சாவை பிரவுண் கலர் பேப்பரில் சுற்றி அதற்கு பி-1 என குறியீடு செய்தோம். அதில் நான் மற்றும் தலைமைக்காவலர் கிருஷ்ணன் ஆகியோர் கையொப்பம் செய்து சிலிப் ஒட்டினோம். 11.20 மணிக்கு எதிரியை கஞ்சா வைத்திருந்த குற்றத்திற்காக கைது செய்து 11.30 மணிக்கு நிலையம் கொண்டுவந்து எதிரி மீது வழக்கு பதிவு செய்ய சார்ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். என்னை சார் ஆய்வாளர் விசாரணை செய்தார்.

சோதனை சம்மத கடிதம் அ.சா.ஆ. 1 ஆகும். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள எதிரியின் கையொப்பம் அ.சா.ஆ. 2 ஆகும். அத்தாட்சி அ.சா.ஆ. 3 ஆகும்.

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

சம்பவ இடத்திற்கு உதவி ஆய்வாளருக்கு கிடைத்த தகவலின் பேரில் சென்றோம். தகவல் பற்றி உதவி ஆய்வாளர் தான் என்னிடம் கூறினார். சம்பவ இடம் காவல் நிலையத்தில் இருந்து சுமார் ½ கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. சம்பவ இடத்திற்கு போலீஸ் ஜீப்பில் சென்றோம். அந்த வாகனத்தை உதவி ஆய்வாளரோ சாட்சியாகிய நாங்களோ ஓட்டவில்லை. ஓட்டிய நபர் பெயர் ஞாபகம் இல்லை. சம்பவ இடத்தில் தனி நபர்களை சட்சியாக இருக்கும்படி உதவி ஆய்வாளார் அழைத்த பின்னரும் யாரும் சாட்சியாக இருக்க முன் வரவில்லை. சோதனை சம்மத கடிதம் மற்றும் அத்தாட்சி ஆவணங்களை உதவி ஆய்வாளர் தான் எழுதினார். (பின்னர் சாட்சி கூறுகிறார் யார் எழுதினார் என்று ஞாபகம் இல்லை) சோதனை சம்மத கடிதம் மறறும் அத்தாட்சியை எவ்வளவு நேரம் எழுதினோம் என்று ஞாபகம் இல்லை. சம்பவ இடத்தில் சுமார் 1 மணி நேரம் இருந்தோம். காவல் நிலையத்திற்கு 11.30 மணிக்கு வந்தோம். அத்தாட்சியில் எதிரியின் கைரேகை மற்றும் கையொப்பம் இல்லை என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி சொன்னதுபோல் எந்த ரோந்துக்கும் செல்லவில்லை என்றும் முதல் விசாரணையில் சொல்ல பட்ட இடத்தில் எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும் சார்பு ஆய்வாளர் பதிவு செய்த வழக்கிற்கு ஆதரவாக ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயார் செய்து அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்ட சான்றுப்பொருளுக்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.